# இயல் 7.4 - நேர் மற்றும் எதிர் விகிதங்கள்

பயிற்சி எண் :: 7.4.1.1.D

நேர் விகிதம் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## நேர் விகிதம் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

நம் பள்ளியில் 7-ஆம் வகுப்பில் 30 மாணவர்கள் பயிலுகிறார்கள். அவர்களுக்கு மதிய உணவு கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு ₹5200 செலவாகிறது. நம் பள்ளியில் மொத்தமாக 240 மாணவர்கள் பயிலுகின்றனர். அவ்வாறெனில், பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் ஒரு மாதம் மதிய உணவு கொடுப்பதற்கு எத்தனை ரூபாய் செலவாகும்?

★

7-ஆம் வகுப்பில் 30 மாணவர்களும் முழுப்பள்ளியில் 240 மாணவர்களும் பயிலுகின்றனர். மாணவர்களின் எண்ணிக்கை கூடுவதுபோல் மதிய உணவிற்கு ஆகும் செலவும் அதற்குத் தகுந்தாற்போல் கூடும். இது **நேர் விகிதம்** ஆகும். எனவே, நாம் நேர்விகிதத்திற்குரிய சமன்பாட்டை கீழ்க்காண்பது போல் பயன்படுத்த வேண்டும்.

$$\frac{x_1}{y_1} = \frac{x_2}{y_2}$$

மதிப்புக்களை மாற்றீடு செய்கையில் நமக்குக்கிடைப்பது;

$$\frac{5200}{30} = \frac{x_2}{240}$$

$$x_2 = \frac{5200 \times 240}{30}$$

$$= \frac{5200 \times \overset{8}{\cancel{240}}}{\underset{}{\overset{1}{\cancel{30}}}} \longrightarrow$$

$$\begin{array}{r} 5\ 2\ 0\ 0 \\ \times \quad\quad\quad 8 \\ \hline 4\ 1\ 6\ 0\ 0 \end{array}$$

$= 41,600$

பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் ஒரு மாதம் மதிய உணவு கொடுப்பதற்கு ₹41,600 தேவைப்படும்.

## Information Rights & Disclaimers


Sum & solution prepared on Wednesday 3rd August, 2022 :: 05:20 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
**https://ramaswamychellammaltrust.org** § **info@ramaswamychellammaltrust.org**

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**